# கணினி / இணையம் வழிப் பேச்சுத் தமிழ் கற்பித்தல்

முனைவர் செ. ஜீன் லாறன்ஸ்
பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113, இந்தியா

---

தமிழ், உலகின் பழம்பெரும் மொழிகளுள் ஒன்று. இது பேச்சு வழக்கு (பேச்சுத் தமிழ்), இலக்கிய வழக்கு (இலக்கியத் தமிழ்) என இரு வழக்குகளைக் கொண்ட இரட்டை வழக்கு மொழியாகும்.. இவ் இரட்டை வழக்கு நிலை பழந்தமிழிலேயே இருந்துள்ளது என்பதனைத் தொல்காப்பியம் மூலம் அறிய முடிகிறது. இவ் இரு வழக்குகளும் அமைப்புகளில் (இலக்கணக் கூறுகளில்) மாறுபடுவதோடு, பயன்பாடுகளிலும் மாறுபடுவன. இலக்கிய வழக்கு, நூல்கள் மற்றும் கட்டுரைகள் எழுதுவதற்கும், உரைகள் நிகழ்த்துவதற்கும், வகுப்பறையில் பாடங்கள் நடத்துவதற்கும், வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசித்தல் போன்றனவற்றிற்கும் பயன்படுத்தப்படுகிறது. பேச்சு வழக்கு உற்றார், உறவினர், நண்பர்களோடு உரையாடுவதற்கும், பொது இடங்களில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் பயன்பாட்டில் உள்ளது. தவிர, தற்காலத்தில் நாவல்கள் மற்றும் சிறுகதைகள் பேச்சு வழக்கிலும் எழுதப்படும் நிலையினைக் காணலாம். மேலும் இலக்கிய வழக்கில் எழுதப்பட்டுள்ள நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் கதாபாத்திரங்களின் உரையாடல்கள் பேச்சு வழக்கிலும் அமைந்துள்ளன.

இத்தகைய பேச்சு வழக்கு வட்டாரக் கிளைமொழிகளாகவும், சாதிக் கிளைமொழிகளாகவும் உள்ளன. தாய்நாட்டில் வட்டாரக் கிளைமொழி, தென் கிளைமொழி, வட கிளைமொழி, மத்தியக் (கிழக்கு) கிளைமொழி, மற்றும் மேற்குக் கிளைமொழி எனவும், சாதிக் கிளைமொழி, பிராமணர் கிளைமொழி, பிராமணர் அல்லாதார் கிளைமொழி மற்றும் அரிசனர் கிளைமொழி எனவும் பேச்சு வழக்கில் காணப்படும் வேறுபாடுகளின் அடிப்படையில் அறிஞர்களால் பகுக்கப்பட்டுள்ளன. இவ் ஒவ்வொரு கிளைமொழியும் தத்தமக்கே உரிய சில மொழியியல் கூறுகளைக் கொண்டுள்ளன. எனவே இக்கிளைமொழிகளுக்கிடையே ஒலியியல், சொல்லியல், சொற்களஞ்சியம் போன்றனவற்றில் காணப்படும் வேறுபாடுகளின் காரணமாக வெவ்வேறு கிளைமொழிகள் பேசும் மக்களிடையே கருத்துப் பரிமாற்றத் தடங்கல் ஏற்படுவதைக் காண முடிகிறது.

தென் கிளைமொழியில், குறிப்பாகக் கன்னியாகுமரி மாவட்டப் பேச்சு வழக்கில் ற பயன்பாட்டில் உள்ளது. ஆனால் பிற கிளை மொழிகள் அனைத்திலும் ற வழக்கில் இல்லை. அதற்குப் பதிலாக ர பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| கரி (தெ. கி.) | கரி (பி. கி.) |
| கறி " | கரி " |

மத்தியக் கிளைமொழியினை ழகரக் கிளைமொழி எனக் குறிப்பிடுவர். இங்கு மட்டுந்தான் ல், ள், ழ் ஆகிய மூன்று ஒலிகளும் பயன்பாட்டில் உள்ளன. ழகரம் பிற கிளைமொழிகளில் ளகரமாக மாறியுள்ளதோடு இது வட கிளைமொழியில் யகரமாகவும் ஸகரமாகவும் மாறியுள்ளது.

| | |
|---|---|
| தெ. கி. - தென் கிளை மொழி | பி கி. பிற கிளை மொழிகள் |
| பழம் (ம. கி.) | பளம் (பி. கி.) |
| கழுதெ " | கய்தெ (வ. கி.) |
| இழுத்துகிட்டான் " | இஸ்துகினான் " |

தென் கிளைமொழியில் -வச்சி மூன்றாம் வேற்றுமை உருபாக உள்ளது.

அவென் கத்திவச்சி வெட்டுனான்.

(அவன் கத்தியால் வெட்டினான்.)

மேற்குக் கிளை மொழியில் நான்காம் வேற்றுமை உருபு இலக்கிய வழக்கில் உள்ளது போன்று இருப்பினும் இது தன்மை ஒருமை, பன்மை பதிலிப் பெயர்களுடன் இணையும் நிலையில் நிலைமொழி வடிவங்கள் மாறாமல் உள்ளன.

| | |
|---|---|
| நான் + கு = நனக்கு | (எனக்கு) |
| நாங்கள் + கு = நங்களுக்கு | (எங்களுக்கு) |

வட கிளைமொழியில் -ஆண்டெ ஏழாம் வேற்றுமை உருபாகப் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| என் + ஆண்டெ = என்னாண்டெ | (என்னிடம்) |
| ஊடு + ஆண்டெ = ஊடாண்டெ | (வீட்டில்) |

மேலும் ஒவ்வொரு வட்டாரக் கிளைமொழியிலும் அதனதனுக்கே உரிய பல தனிச்சொற்களைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| கண்ணம்மெ | (தெ.கி.) | (பாட்டி) |
| சக்கெ | " | (பலாப்பழம்) |
| திருணா | (ம.கி.) | (திருநாள்) |
| எம்பளது | " | (எண்பது) |
| அணத்தான் | (மே.கி.) | (அணில்) |
| புட்டு | " | (இட்லி) |
| கடாயி | (வ.கி.) | (வாணல்) |
| சோமாரி | " | (சோம்பேறி) |

வட்டாரக் கிளைமொழிகளில் காணப்படும் வேறுபாடுகளைப் போல் சாதிக் கிளைமொழிகளிலும் பல வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பிராமணர் பேச்சு வழக்கில் காணப்படும்

| | |
|---|---|
| ஆம்படையான் | (கணவன்) |
| ஆம்படையாள் | (மனைவி) |
| சங்கோஜம் | (வெட்கம்) |
| தோப்பனார் | (தகப்பனார்) |

போன்ற சொற்களும்

---

ம. கி. - மத்தியக் கிளைமொழி மே. கி. - மேற்குக் கிளை மொழி வ. கி. - வட கிளை மொழி

| | |
|---|---|
| நேக்கு | (எனக்கு) |
| நோக்கு | (உனக்கு) |
| வந்தேள் | (வந்தீர்கள்) |

போன்ற இலக்கணக் கூறுகளும் பிற சாதிக் கிளைமொழிகளில் பயன்பாட்டில் இல்லை.

இவ்வாறு இலக்கிய வழக்கில் ஒற்றுமையுடனும் பேச்சு வழக்கில் வேற்றுமையுடனும் பயின்றுவரும் தமிழ்மொழி இன்று பலராலும் பல நிலைகளில் கற்கப்பட்டு வருகிறது. இது தாய்மொழியாகக் கற்பிக்கப்படுவதோடு இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகிறது. தமிழ்நாடு தவிர இந்தியாவின் பிறமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் கற்க விரும்பும் பிற மொழியினர் இதனை இரண்டாம் மொழியாகக் கற்று வருகின்றனர்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பல நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றுக்கொடுக்கின்றன. இவ் இரண்டாம் மொழிக் கல்விக்கு நூல்கள், ஒலி நாடாக்கள், கணினி குறுவட்டுகள் மற்றும் இணையம் பயன்பாட்டில் உள்ளன. இவைகளில் பெரும்பாலானவை இலக்கியத் தமிழ் கற்பதற்கே துணை நிற்கின்றன. ஒரு சில நூல்கள் பேச்சுத் தமிழ் கற்பதற்குத் தயாரிக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் இலக்கிய வழக்கும் அதற்கு இணையான பேச்சு வழக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில, இலக்கிய வழக்குக் கற்றபின் அதனைப் பயன்படுத்தி மாற்று விதிகள் மூலம் பேச்சு வழக்கினைக் கற்க உதவுகின்றன.

இவைகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலக்கியத் தமிழ் கற்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதையும் பேச்சுத் தமிழ் கற்பதற்கு வாய்ப்புகள் சிறிது குறைவாகவே இருப்பதையும் உணரமுடிகின்றது.

தமிழ் நாட்டில் பணிபுரிகின்ற பிற மாநிலத்தவர் / மொழியினர் மற்றும் இங்கு ஆய்வுப் பணி தொடர்பாகக் கள ஆய்விற்கு வருகின்ற வெளிநாட்டினர் போன்றோர் குறுகிய காலத்தில் பேச்சுத் தமிழ் கற்பதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். எழுத்துத் தமிழ் (இலக்கியத் தமிழ்) கற்க விரும்பாது பேச்சுத் தமிழ் மட்டும் ஒலிபெயர்ப்பு மூலம் கற்க விரும்பும் இவர்களது தேவையினைப் பூர்த்திச் செய்ய நூல்கள் / கணினி குறுவட்டுகள் / இணையம் வழி பயிற்சித் தேவைப்படுகின்றது. இதனை நிறைவு செய்வது தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் / நிறுவனங்களின் கடமையாகும்.

இக் கட்டுரையின் முன் பகுதியில் குறிப்பிட்டுள்ளதுபோல் தமிழ் பேச்சு வழக்கு, பல கிளைமொழிகளாக உள்ளது. இவை அனைத்தையும் கற்றுக் கொடுப்பதோ, கற்றுக் கொள்வதோ எளிதல்ல. எனவே பேச்சுத் தமிழ் கற்பிப்பதற்குப் பொதுப் பேச்சு வழக்கு பயன்படுத்தப்படுகிறது. பொதுப் பேச்சு வழக்கு என்பது கற்ற நடுத்தர மக்கள் பயன்படுத்தும் வட்டார வழக்குகள் மற்றும் சாதி வழக்குகள் தவிர்த்த பொது வழக்கு என்பது அறிஞர்கள் கருத்து. இது குமரி முதல் சென்னை வரை அனைத்து மக்களும் புரிந்து கொள்ளும் இயல்பினதாகும். அதாவது இது வட்டார மற்றும் சாதி வழக்குகள் அற்ற நிலையில் தமிழ்மொழி பேசுவோர் அனைவரும் தடங்கலின்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்ய உதவும் பொதுப் பேச்சு வழக்கு.

பொதுப் பேச்சு வழக்குக் கற்பித்தலுக்குரிய பாடத்திட்டம் தயாரிப்பதற்கு இப்பேச்சு வழக்கிற்குரிய முழு இலக்கணம் தேவை. தற்போதைய பொதுப் பேச்சுத் தமிழுக்கு, அதன் ஒலியியல், சொல்லியல், தொடரியல், பொருளியல், சொற்களஞ்சியம் போன்ற அனைத்தையும் விளக்கும் தனி இலக்கண நூல் இல்லை. பேராசிரியர் ஹெரால்ட் ஷிப்மன் திருச்சி வானொலி நிலையம் 1966இல் ஒலிபரப்பிய நாடகங்களைத் தரவுகளாகக் கொண்டு, பேச்சுத்தமிழ் இலக்கண நூல் எழுதியுள்ளார். தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பேச்சுத் தமிழ் கற்பித்தலுக்கான பாடங்கள் இவ் இலக்கண நூல் கருத்துகள் மற்றும் ஆசிரியர்கள் பொதுப் பேச்சுத் தமிழில் பெற்றுள்ள அறிவுத்திறன் போன்றனவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு விளக்கங்கள் / பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்கது; எனினும் முழுமையான கள ஆய்வு மேற்கொண்டு பொதுப் பேச்சுத் தமிழ் இலக்கணக் கூறுகளை விளக்குதல் சிறப்பாக அமையும். எனவே குமரி முதல் சென்னை வரை கள ஆய்வு மேற்கொண்டு தற்போதைய பொதுப் பேச்சுத் தமிழின் மொழிக் கூறுகள் அனைத்தையும் விளக்கும் இலக்கண நூல் தயாரித்தபின் பேச்சுத் தமிழ் கற்பித்தலுக்கான பாடத்திட்டம் தயாரித்தல் வேண்டும்..

பேச்சுத் தமிழ் கற்போர் தமிழ் எழுத்துகளைக் கற்காத நிலையில் பாடங்கள் ஒலிபெயர்ப்பு முறையில் அமைதல் வேண்டும்.. அதாவது பேச்சுத் தமிழ் கற்போருக்குத் தமிழ் வரிவடிவம் கற்பிக்க வேண்டியதில்லை. ஏனெனில் இவர்களது குறிக்கோள் தமிழில் பேசிப் பழகுவதுதான்; எழுதுவது மற்றும் படிப்பது அல்ல. எனவே இவர்களுக்கான பாடங்கள் ஒலிபெயர்ப்பு முறையில் இருந்தால் போதும். தற்போது எழுதப்பட்டுள்ள பாடநூல்களில் தமிழ் ஒலிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒலி பெயர்ப்புகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ட, ற, ழ என்ற மெய்யெழுத்துகளுக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ட | t | d | | |
| ற | r | R | | | |
| | | ழ | l | ż | R |

என ஒலிபெயர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளன. இதே நிலையினை உயிர் நெடில் ஒலிபெயர்ப்புகளிலும் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | aa, | a, | a:, | A |
| ஈ | ii, | i, | i:, | I |

| | | | | |
|---|---|---|---|---|
| உ | uu, | u, | u:, | U |
| எ | ee, | e, | e:, | E |
| ஒ | oo, | o, | o:, | O |

என ஒலிபெயர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் பொருத்தமான ஒன்றினைத் தேர்வு செய்து தரப்படுத்தல் வேண்டும். இது கற்போருக்கு ஏற்படும் குழப்பத்தினைத் தவிர்க்க உதவும். மேலும் தமிழ்ச் சொற்களை ஒலிபெயர்ப்பு வடிவில் கொடுக்கும்போது தமிழ் வரிவடிவ எண்ணிக்கையினை (உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள்18, ஆய்தம் 1) விட கூடுதல் வடிவங்கள் தேவைப்படும். எனவே தேவைக்கு ஏற்றாற்போல ஒலிபெயர்ப்பு வடிவங்களின் எண்ணிக்கையினைக் கூட்டுதல் வேண்டும்.

தமிழ் ஒலிகளை / வரிவடிவங்களைத் தமிழ் எழுத்துகளின் வரிவடிவ ஒற்றுமையின் அடிப்படையில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன வகைப்பாட்டினைப் பின்பற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| ட | ப | ய | ம | ழ |
| ஈ | ர | ச | க | த |
| அ | ஆ | இ | | |
| ந | ங | | | |
| எ | ஏ | ஞ | வ | ல |
| ற | ஐ | | | |
| ள | ன | ண | | |
| ஒ | ஓ | ஔ | | |
| உ | ஊ | | | |

என கற்றுக்கொடுக்கும் நிலையும் தற்போது காணப்படுகிறது.

ஆனால் பேச்சு வழக்குக் கற்பித்தலில் தமிழ் வரிவடிவம் கற்றுக் கொடுக்கப்படவேண்டாத நிலையில் தமிழ் ஒலிப்பு முறையினை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ........... என உயிர் எழுத்துகளையும், க், ங், ச், ஞ், ........... என மெய் எழுத்துகளையும் மரபு முறைப்படி கற்றுக்கொடுக்கலாம்.

தமிழில், இலக்கிய வழக்கு ஒலிப்பிற்கும் பேச்சு வழக்கு ஒலிப்பிற்குமிடையே வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, இலக்கிய வழக்கில் மெய்யொலிகள் ன், ம் சொல்லின் இறுதியில் தனியாக உச்சரிக்கப்படும். ஆனால் இவை பேச்சு வழக்கில் இவற்றிற்கு முன்னர் வரும் உயிரொலியுடன் இணைத்து ஒலிக்கப்படுகின்றன. இத்தகைய ஒலிக்கூறுகளின் வேறுபாடுகள் விளக்கப்பட்டு ஒலிப்பு முறையில் நன்கு பயிற்சி பெறுவதற்கு ஏற்றாற்போல் ஒலிப்புப் பயிற்சிக்கான பாடங்கள் இருத்தல் வேண்டும்.

பேச்சு வழக்குக் கற்றலின் குறிக்கோள் ஒருவர் ஒருவரோடு உரையாடிக் கருத்துப்பரிமாற்றம் செய்வது தான். எனவே பேச்சுத் தமிழ் கற்றுக்கொடுக்கத் தயாரிக்கப்படும் பாடங்கள் அன்றாடப் பயன்பாட்டிற்கு ஏற்ற பல்வேறு சூழல்களில் அமைந்த உரையாடல்களாக இருத்தல் வேண்டும். பாடங்கள் எளிமையிலிருந்து கடின நிலைக்குச் செல்வதாகவும் நீண்ட உரையாடல்களைத் தவிர்த்து எளிய, குறுகிய உரையாடல்களைக் கொண்டதாகவும் அமைந்தால் கற்றல்/ கற்பித்தல் எளிதாகும்.

மேலும் சொற்றொடர்கள் தமிழ் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் முறையில் அமைதல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஆங்கிலப் பண்பாட்டை மனதில் கொண்டு,

""இங்கேயிருந்து வள்ளுவர் கோட்டத்துக்கு எப்படிப் போறதுண்ணு
நீங்க கொஞ்சம் எனக்கு வழிசொல்றீங்களா?"

போன்ற ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு இணையான சொற்றொடர்களை அமைக்காது,

""ஐயா, வள்ளுவர் கோட்டத்துக்கு எப்படிப் போணும்?"

போன்ற சொற்றொடர்களைக் கொடுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பாடங்களிலும் அதில் இடம் பெற்றுள்ள புதிய இலக்கணக் கூறுகளின் அமைப்பு, பயன்பாடு/ செயல்பாடு விளக்கப்பட்டு இலக்கணக் கூறுகளின் உருவாக்கத்திற்கும், தொடர்கள் உருவாக்கத்திற்கும் தேவையான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

தற்போது தமிழ் கற்றலுக்கான பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள சில இலக்கணக் கூறுகளின் விளக்கங்கள் இரு வேறு நிலைகளில் அமைந்துள்ளன. அதாவது எதிர்மறை ஏவல் வினைகள், நிபந்தனை எச்சங்கள், பெயரெச்சங்கள், வினை எச்சங்கள் மற்றும் தொழிற்பெயர் ஆகியன வினை அடியுடன் எதிர்மறை வினை ஒட்டுகள் இணைத்து,

ஓடு + ஆதே = ஓடாதே
ஓடு + ஆவிட்டால்= ஓடாவிட்டால்
ஓடு + ஆத = ஓடாத
ஓடு + ஆமல் = ஓடாமல்
ஓடு + ஆத + வன் = ஓடாதவன்

என உருவாக்கப்படுகின்றன என்றும், இவை செயவென் எச்சத்துடன் எதிர்மறை வினை ஒட்டுகள் இணைத்து,

ஓட + ஆதே = ஓடாதே
ஓட + ஆவிட்டால்= ஓடாவிட்டால்
ஓட + ஆத = ஓடாத
ஓட + ஆமல் = ஓடாமல்
ஓட + ஆத + வன் = ஓடாதவன்

என உருவாக்கப்படுகின்றன என்றும் விளக்கப்படுகின்றன. இது கற்போருக்குக் குழப்பத்தை விளைவிக்கும். எனவே முதலில் கொடுக்கப்பட்டுள்ள எளிய முறையினைப் பின்பற்றி இவ் இலக்கணக் கூறுகளின் உருவாக்கத்தைக் கற்றுக் கொடுப்பது சிறப்பாக அமையும்.

மேலும் இப்பாடங்களில் இடம்பெறும் தேவையான சொற்களுக்குப் பயன்பாட்டு விளக்கங்களும் பண்பாட்டு விளக்கங்களும் கொடுத்தல் வேண்டும். ஏனெனில் வெளிநாடுகளில் மணமகன் மற்றும் மணமகள் இருவரும் மோதிரம் மாற்றுதல் திருமணச் சடங்காக உள்ளது. ஆனால் தமிழர் பயன்பாட்டில் மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டுதல் திருமணச் சடங்காக உள்ளது. "தாலி கட்டுதல்' என்ற சொல்லின் பண்பாட்டு விளக்கம் கொடுக்கப்படாத நிலையில், தமிழ் கற்கும் வெளிநாட்டினர்,

"அவள் அவன் கழுத்தில் தாலி காட்டினாள்'

என்ற இலக்கண வழுவற்ற பண்பாட்டு வழுவான சொற்றொடரை உருவாக்க நேரிடும். எனவே தமிழரின் பண்பாட்டோடு தொடர்புடைய சொற்களுக்குப் பண்பாட்டு விளக்கங்கள் கொடுக்கும் நிலையில் கற்போர் இத்தகைய வழுவான சொற்றொடர்களை உருவாக்கும் நிலையினைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு தயாரிக்கப்படும் பாடங்களை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட, தமிழ் ஒலிப்பில் நல்ல பயிற்சி பெற்ற, குரல் வளமிக்க வல்லுநர்கள் ஒலிப்பில் பதிவு செய்து, கணினி வல்லுநர் உதவியுடன் கணினி / இணையம் மூலம் வழங்கி உலகின் பல்வேறு பகுதியில் வாழ்பவர்களுக்குப் பேச்சுத் தமிழைச் சிறப்பாகக் கற்பிக்கலாம்.

## துணைநூற்பட்டியல்


1. அரங்க வாசு, "உலகளாவிய மின் வலையில் தமிழ்ப் பாடம்', உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு கட்டுரைத் தொகுப்பு, சென்னை, 1999.
2. கார்த்திகேயன், ஆ., தமிழ் பாடநூல் - 1, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1996.
3. சீனிவாசவர்மா, கோ., கிளை மொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1980.
4. Deivasundaram, N. Dr., Gopal, A. Dr., Tamil - An Auto-Instructional Course, International Institute of Tamil Studies, Chennai, 1984.
5. Gnanasundaram, V. Dr., 'Standard spoken Tamil', Sociolinguistics and Dialectology, Seminar papers, Eds. Agesthialingam, S., Karunakaran, K., Annamalai University, Annamalainagar.

6. Harold Schiffman, A Grammar of Spoken Tamil, The Christian Literature Society, Madras, 1979.
7. Jean Lawrence, S., 'Material Production for Multimedia Package', Tamil Internet 2001 Conference Papers, Kuala Lumpur, 2001.
8. S. Jean Lawrence, Tamil Ulagam, C.D., International Institute of Tamil Studies, Chennai, 2001.
9. Jothimuthu, P., A Guide to Tamil, The Christian Literature Society, Madras, 1965.
10. P. Kothandaraman, A Course in Modern Standard Tamil, International Institute of Tamil Studies, Madras, 1975.
11. Kumaraswamy Raja, N. and Doraswamy, K., Conversational Tamil, Annamalai University, Annamalainagar, 1966.
12. Rajaram, S., An Intensive Course in Tamil, Central Institute of Indian Languages, Mysore, 1979.
13. Sankaranarayanan, G., A Programmed Course in Tamil, Central Institute of Indian Languages, Mysore, 1994.
14. Shanmugam Pillai, M., Spoken Tamil, Part - I, Madurai, 1965.
15. Shanmugam Pillai, M., Spoken Tamil, Part - II, Annamalai University, Annamalai Nagar, 1968.

---

குறிப்பு: இக்கட்டுரையில் தமிழ்ப் பேச்சு வழக்கு தொடர்பாகக் கொடுத்துள்ள எடுத்துக்காட்டுகள், கிளைமொழியியல் என்ற நூலிலிருந்து பெறப்பட்டவை.